Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300] of 1953.

விரோதிஇல (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எ௫] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஇல ஆனிமீ கச உ வெள்ளிக்கிழமை (28 June. 1963) [இல-கரு]

# மாயாவாத தும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை ஞாபகம்

[பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை]

(முற்றொடர்-13)

### சங்கரர்

ஒரு நூல் சாதி வேறுபாடு கூறுகிறதென்றால் அதைச் சுட்டெரி என்று சொல்லத் தயங்காதவர்களின்கூட்டம் அதிகரித்தகாலம் இந்தக்காலம். அந்த நூல் கம்பராமாயணமாயினும் பெரியபுராணமாய்த்தானிருந்தாலும் "சுடு" என்றே சொல்லிவிடுவார்கள். 'நலத்தின்கண் நாரின்மை தோன்றின் ஒருவன் - குலத்தின்கண் ஐயப்படும்" என்ற குறளும் மேற்படி கூட்டத்தார் கைப்பட்டு விசாரிக்கப்படுமானால் வான் புகழ்கொண்ட திருக்குறளும் மண்ணுலகை விடவேண்டியும் வரலாம். இப்படியானதொரு நிலை, வேள்வி பேசும் நூல்களுக்குப் புத்தர்காலத்தில்வந்துவிட்டது. புத்தரின் போதனை, அவருடைய இரக்கம் சனங்களை வசீகரித்துவிட்டன. வேள்வியென்றால் உயிர்களை வதைப்பது என்ற எண்ணமே மேலோங்கியது. அதனால் வேள்வி பேசும் வேதத்தின் நிலை, இப்பொழுது சாதி பேசும் நூல்களின் நிலைக்குச் சமமாய் விட்டது. சனங்கள் வேதங்களைக் கைவிட்டார்கள் மற்றொரு மதம் எளிதில் உதயமானது; அது புத்தமதம். அதனால் புத்தத்தினின்றும் வேதத்தைப் பாதுகாக்கச் சங்கரர் உதயமானார். சங்கரர் பிறவாதிருந்தால், பாரததேசத்தின் வடபாகத்தைப் புத்தம் விழுங்கியிருக்கும். அப்பாகம் எளிதிற் சீனவாய் விடும்.

சங்கரர் வேதத்தைக் காக்கப் புறப்பட்டார். ஆனால், வேதத்தின் கன்மகாண்டம் ஞானத்துக்கு நிமித்தமாயினும் அதனைக் காக்க முடியவில்லை. கன்மகாண்டம் வேள்வியைவிதிப்பதால் அதனைக் காக்க முடியவில்லை. வேதவேள்வி கொலைவேள்வியன்று என்று தாபித்தற்கு முடியாத நிலைநேர்ந்துவிட்டது. சாதிக் கட்டுப்பாடு நூல்களின் சம்மதம் என்று பேசினால், சாதியபிமானிகளே இக்காலத்திற் பகிரங்கயாகக் கேட்பதற்கு உடன்படார்கள். திராவிடசிசு என்று சங்கரரால் புகழ்ந்து துதிக்கப்படுபவர் திருஞானசம்பந்தர் சம்பந்தரராற் புகழப்படுவது வேதவேள்வி. அப்படிப்பட்ட வேள்வி, கொலை வேள்வி அன்று என்று போதிப்பதற்கு அக்கால நிலை சங்கரருக்கு இடங்கொடுக்கவில்லை. அதனால் சங்கரரும் புத்தரோடு ஒத்தவர்போன்று கன்மம் முக்கியம் அன்று என்றார்.

வீடுபற்றி எரிகிறது. எல்லாப் பொருளையும் எடுத்து வெளியே வீசுவதென்பது முடியாத காரியம். பிரதான பொருள்களையாவது எடுத்து வெளிக்கொணர்ந்து பாதுகாப்பதே செய்யத்தக்கது. வேதத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது வேதத்தின் ஞானகாண்டமாகிய உபநிடதம்; அது வேதாந்தம் என்று போற்றப்படுவது.

வேதாந்தமாகிய உபநிடதத்தையாவது பாதுகாக்கத் துணிந்தார் சங்கரர். புத்தம் சூனிய வாதம். அதற்கு உயிர், கடவுள் என்ற பண்டங்களில்லை. சில பொருள்களின் கூட்டரவினால் இந்தத்தேகம் உண்டாகிறது. அதில் உணர்ச்சி உதிக்கின்றது. அவ்வுணர்ச்சி கவலையைப் பெருக்குகின்றது. கவலையைப் போக்க வழி என்ன? கவலையைப் போக்க வழி தேகக்கூட்டரவைப் போக்கிச் சூனியமாய் விடுவதே என்றது புத்தம். தனக்குவமை இல்லாதான் தாள் சேர்தல்தான் கவலை போக்க வழி என்று புத்தம் சொல்லவில்லை. தனக்குவமை இல்லாதவன் என்றொருவன் உண்டு என்று புத்தம் கொள்ளவில்லை. "ஒருவன் உண்டு. அவன் பிரமம்; ஒரே ஒருவன் அவன்தான் நீ. நீ பிரமம். உன்னை நீ பிரமம் என்றே தெற்றெனத் தெளிதி; இதோ வேதாந்த மகாவாக்கியங்களைப் பாருங்கள். குரு நீ பிரமம் என்கிறார் நான் யார் என்று விசாரிக்க வந்த சீடன் சாதகம் செய்து, நான் இந்தத் தேகம் அல்லேன்; நான் பிரமமாயிருக்கிறேன் என்று கூறி மகிழ்கின்றான்." என்றிங்ஙனம் சங்கரர் போதிப்பாராயினர். தம் போதனைகளுக்கு உபநிடதங்களிற் பிரமாணங்கள் காட்டினார். புத்தர் கூறியவாறு சூனியமாய்ப் போவதை யார்தான் விரும்புவார்கள், எலித்தொல்லையைப் போக்குவதற்காக நெற்குவியலோடு கூடிய வீட்டுக்கு யார்தான் நெருப்பு வைப்பார்கள். தான் பிரமமாவதை யார்தான் விரும்பார்கள்; சங்கரர் போதனைக்கு நல்ல வரவேற்பு வாய்த்தது உபநிடதங்களுக்கு மதிப்புங் கிடைத்தது மறந்த வேதத்தைப் போற்றினார்கள். புத்தம் பிறந்தகத்திற் குடியிருக்க முடியாமற் பரதேசம் போனது. புத்தரோடு ஒத்து வேதவேள்வியாகிய கன்மத்துக்கு முக்கியத்துவம் கொடாமல் சனங்களின் வழியிற் சென்று சீர்திருத்தம் செய்தமையால் சங்கரர் பிரச்சன்ன பௌத்தராயினர். சங்கரரின் குரு கோவிந்தயோகி. அவர் குரு கௌடபாதர். இவர் பௌத்த பிக்கு வேடம் பூண்டு, பிக்குகளோடு கலந்து, புத்தமத இரகசியங்களை அறிந்துகொண்டு, புத்தத்தைத் தொலைக்கும் பொருட்டு, பாளியில், பௌத்த பரிபாஷையில் சில உபநிடதங்களுக்கு உரை வகுத்திருக்கிறார் என்று சரித்திரம் உண்டு. தாம் கள்ளமாகப் புத்தம் படித்த தோஷத்தைப் போக்குதற் பொருட்டுத் தம்மை உயிரோடு கொளுத்திச் சுடும்படி தம் சீடர்களுக்குக் கட்டளையிட்டவரென்றும், அப்படியே சீடர்கள் செய்தவர்கள் என்றும் கதை புகன்... (தொடரும்)

### நற் சிந்தனை

—:—

உருகி உருகி
உணர்வழிந்து நின்று
பெருகி வருமமிழ்தைப்
பருகுவது மெக்காலம்,

### நல்லூரில் அம்பாள் பிரதிஷ்டை

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேரடியிலிருந்து இன்று (28-6-63) வெள்ளிக்கிழமை மாலை 6-50 மணியளவில் புதிதாக உருவாக்கப்பட்ட அம்பாள் விக்கிரகம்வீதிவலமாகஎடுத்துச் செல்லப்பட்டுக் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட இருக்கிறது.

உ

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையோன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே,

x x x

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

# அருளுக்காக அழுதார் மணிவாசகர்!

சிரித்துப்பெறுவதும், சீறிப்பாய்ந்து சினந்து பெறுவதும் தேவையை நிறைவேற்றுமேயொழிய வேண்டிய பூரணத்துவத்தைத் தரா. கெஞ்சி இரந்து பெறுவனவும், மிஞ்சி எழுந்து பெறுவனவும் அஞ்சி அடங்கிப் பெறுவனவும், ஒருகால் பிரிந்து சென்று துன்பத்தையும், துயரையும் தரலாம். ஆனால் ஆராக்காதலால் அழுது அரற்றி அயராது உழைத்துப் பெறும் எல்லாமே பூரணத்துவத்துடன், குறைவிலா நிறைவைத்தருகின்றன! குழந்தைகள் வினயமாக வேண்டுவனவற்றைக் கொடாது, அழுது அரற்றும் கொடுத்து மகிழ்விக்கும் அன்னையரைக் காண்கின்றோம். அம்மை அப்பனான ஆண்டவனும் அழுது தொழுவாரை அகமகிழ்வில் ஆழ்த்தும் அன்னையைப்போல்வான். மாணிக்கவாசகர் அழுதடியடைந்த அனுபூதிமான், அவரது அழுகை அன்னையாகிய ஆண்டவனை அவர்பால் ஈர்த்தது. "நானும் பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" எனக்கூறி அழுதழுது ஆண்டவனின் அருளால் அமுதத்தைத் துய்த்தவர், எல்லாம்வல்ல இறைவனை - எங்கும் நிறைந்த பரம்பொருளை — அருவமுமாய், உருவமுமாய், அருவுருவமுமாய் இலங்கும் இறைவனைத் தன் கண்ணீர் என்னும் ஆயுதத்தால் அசைத்துக் கரையவைத்து, தனக்குத் தேவையானதைப் பெற்றிருக்கிறார் மாணிக்கவாசகர்.

திருவாசகம் நெஞ்சை நெகிழவைக்கும் ஒரு மாமருந்து, வயிற்றின் அழுக்கை அகற்ற மருத்துவமனையின் மருந்து தேவைப்படுகிறது. நெஞ்சின் அழுக்கை அகற்ற மணிவாசகரின் திருவாசகம் உதவுகின்றது. திருவாசகம் கல்நெஞ்

தொடர்ச்சி 4-ம் பக்கம்)

"ஈழத்துச்சிவானந்தன்"

# பாய்புலித் தோல்கலங்க!

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : கல்யாணி :: தோடி : ஆதி

பல்லவி

தாண்டவம் செய்யும் அப்பனே — சபைநடுவில்
ஞானகாதி முனிபாட ஜகந்நாதன் லயம்போட (தா)

அநுபல்லவி

ஆண்டவனே சிவனே அரனே பசுபதியே
ஆரணனே ஆதி அருணசல பதியே (தா)

சரணம்

பாதிமதியிரவி பயிலும்சடை குலுங்க
பாம்பணியோடுகங்கை பாய்புலித் தோல்கலங்க
சோதி மணியழகில் தூயவெண் ணீறிலங்க
தொம்தோம் தோமென்று சுந்தரத்தாள் துலங்க. (தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


இந்துசாதனம்
சோபகிருது ஞூ ஆனி மீ
கச௨ வெள்ளிக்கிழமை

## விஞ்ஞானக்கல்விக்கு மேலதிக வேண்டுகோள்

எங்கு பார்த்தாலும் விஞ்ஞானம்என்பதே பேச்சாய் இருக்கின்றது. அவ்வளவில் நின்றுவிடவில்லை அந்தப் புத்துணர்ச்சி. கல்விக் கழகங்களில் விஞ்ஞானத் துறையில் மேலதிகமாக மாணுக்கர்கள் விண்ணைப் பஞ் செய்கின்ற காட்சியும் பெற்றூர் பிள்ளைகளையெல்லாம் விஞ்ஞானிகளாக்கி விடச் செய்யும் முயற்சியும் கல்லூரி அதிபர்கள் இக் கிளர்ச்சிக்கு இடங் கொடுக்க இயலாமையும் இப்பொழுது ஒரு நெருக்கடியான நிலைமையையுண்டு பண்ணுகின்றன.

"அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும்நல்லறிவை"ப் பெறுவதற்குக் கல்விக் கழகங்கள் முதற்கண் வேண்டப்பெறுவன. நல்லவண்ணம ... ம் எல்லோரும் வாழ்ந்து நாட்டுக்குபகாரிகளாகத் திகழ அடுத்தபடி ஒழுக்கநெறிப் பயிற்சிக் கல்வி தேவையாகும். இவ் வகையில் ஆன்றோரின் அரிய நூல்களை மாணுக்கர்கள் ஆய்ந்தறிய வேண்டிய இன்றியமையாமை தோற்றும். அப்பால் நுன் ... இயற்கலைகள் கற்பிக்கப் பெறவேண்டியன. இவையெல்லாம் க... க்தேற இறைவன் ... ருவருள வேண்டும் என்ற உண்மையறிந்து தேறி அதற்குத் தக நடக்கும் மாணுக்கன் முதல்மாணுக்கனுகின்றுன். கற்றபடி ஒழுகும் ஆற்றலில்லாவிடத்தும் கடவுளின் கருணையின் விளைவே கல்விப் பயன் என்ற உணர்ச்சியுள்ளவர்களும் அடுத்தபடியாவர்.

ஆனுற் கல்விகற்றுக் கடவுளை வேண்டுமென்று மறந்தும் மற்றையோருக்கு இறை இல்லை என்ற திரிபுணர்ச்சியுண்டுபண்ணியும் வருகின்ற மாணுக்கர் மாணுக்கர் ஆகார். தெய்வம் என்பதோர் சித்தம் இல்லையேற் கல்வி எதற்கு? விஞ்ஞானத் தேர்ச்சியினுல் வானவெளியில் ஊஞ்சல் ஆடுகின்றேம் ஆனுல் வான் ஒளியைக் காணேம்; பரம்பொருள் என்ற ஒன்றையும் எவ்விடத்திலும் இருந்ததாக இருக்கின்றதாக அறிய முடியவில்லை; இவ்வாறு இறுமாப்புகொண்டு அவ்வழியில் விஞ்ஞானத்தை மாணுக்கருக்குககற்பிக்கும் கல்வி கல்வியாகாது.



எதிர் வரும் 5-7-63 வெள்ளிக்கிழமை காலை நயினுதிவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் தேர்த் திருவிழா நடைபெற இருக்கிறது.

## அணிந்துரை அரங்கம்

**சிவபுராணம்**
(பொழிப்புரையுடன்)
விலை 25 சதம்.

கிடைக்குமிடம்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

சமய அறிவை வளர்க்க விரும்பும் சைவாசிரியர்களும் பெற்றேரும்,தம்பிள்ளைகட்கு அவசியம வாங்கிக் கொடுக்க வேண்டிய நூல்களில் இதுவும் ஒன்றுகும்.

சிறுவர்கள் பொருளுணர்ந்து பக்தியாகப் பாடி இளமையிலிருந்தே ஆத்மசுத்தியும் - ஆத்மசக்தியும பெற வேண்டுமென்ற நோக்குடன் இந்நூலை ஆசிரியர் திரு. சி. கனகநாயகம அவர்கள் மிகு சிரமத்துடன் கவர்ச்சியான முறையில் வெளியிட்டுள்ளார்.

நிறை மலர்க்குருந்தின் கீழ், தெய்வபீடமொன்றில் இறைவனது வேண்டுகோளின்படி அவரது பொன்னுர் திருவடிகளை எழுந்தருளப்பண்ணி மணிவாசகப்பெருமான் மலர் தூவி, சிந்தை மகிழவும், முந்தை வினைகள் மாயவும் சிவபுராணம் ஓதிக் கொண்டிருக்கும் காட்சியைச் சித்திரிக்கும் மூவர்ண முற்பக்க அட்டை அனைவரின் கண்களுக்கும் கருத்துகளுக்கும் விருந்தாக அமைந்துள்ளது.

ஆசிரியர் தமது முன்னுரையில் உலக இன்ப நிலையாமையையும, திருவருட் சிறப்பையும், சிவபுராண வரலாற்றையும் - அதன் அமைப்பையும் விளக்கியுள்ளார்.

மாணவர்க்குப் பயன்படு முறையில் மணிவாசகர் வரலாறும் அவர் செய்த அற்புதங்களும் இரத்தினச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

சிறுவர் பொருள் விளங்கிப் பாடுவதற்கேனப் பாடல் வரிகள் நன்கு சொற் பிரிவு செய்து எதிர்ப் பக்கத்தில் பொழிப்புரையுடன் அமைக்கப்பட்டுள்ளன.

தாள், அடி, கழல்கள் என்ற சொற்கள் தடித்த எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது சிந்தனைக்கு உரியதாகும்.

ஒவ்வொரு பக்கத்திலும் அடிக்குறிப்பாகத்திருவாசகப் பெருமையை விளக்கும் பொன்மொழிகள் தரப்பட்டுள்ளன.

இந் ல் 1961 ஆம் ஆண்டுக் கடைசியில் வெளியிடப்பட்டதாயினும் இன்னும் மாணவருலகில் நன்கு பரப்பப்படாதது மனவருத்தத்திற்கு உரியதாகும். சைவாசிரியர்களும் பெற்றேரும் நம் வருங்காலச் செல்வங்களாகிய பிள்ளைகட்கு மணிவாசகர் திருநாளை முன்னிட்டு இந்நூலை வாங்கிக் கொடுத்துச் சமயப்பணி புரிவார்களாக.

நாட்டின் வளத்துக்கும் பொருள் ஈட்டும் முயற்சிக்கும் விஞ்ஞானம் வேண்டுமென்பதை யாரும் மறுக்க மாட்டார். ஆனுல் விஞ்ஞானங் கற்று அஞ்ஞானிகளாகும் முறையை எல்லாரும் கண்டிப்பர். எனவே விஞ்ஞானக் கல்வி நன்ருக விருத்தியடையலாம் மாணுக்கர் அதைக் கற்றுத் தேறலாம். கற்றும் பயனற்றவர்களாக அவர்கள் வருவதையே நாம் குறைப்பிடுகின்றேம்.

### மாமாங்கேஸ்வரர்

கிழக்கிலங்கையி லிருக்கும் அமிர்தகளி மாமாங்கேஸ்வரர் கோயிலில் இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

## கதாப்பிரசங்கிக்கு "முத்தமிழ் வித்தகர்" பட்டமளிப்பு

"திரு. தா. பொன்னம்பலம் அவர்கள் பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே தோன்றிய ஒருவர். அவருடைய சமய ஞானத்திற்கும் சைவஒழுககத்திற்கும் இந்தப் பெருமையும் ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. இதனைக கூறும் போது அவரது குலத்தவரின் பெருமைபற்றியும் கூறியதாகிவிடுகிறது. அவர் பிறந்ததுமட்டும் சைவச் சூழலில் அல்ல. கல்வி கற்கப் புகுந்த இடமுமே சைவ மறுமலர்ச்சிகு வித்திட்ட மகான் ஒருவரின் உழைப்பில் உருவாகிய இடமாகும். அதாவது வண்ணர்பண்ணை நாவலர் பாடசாலையில் கல்வியை ஆரம்பித்தவர் பொன்னம்பலம் அவர்கள். அதற்கு அடுத்ததாக அவர் கல்வபயின்றதும் ஒரு இந்து சமயக்கல்லூரியில்; அதாவது இந்துக் கல்லூரியில்தான்".

இவ்வாறு கந்தர்மடம் சித்திவிநாயகர் ஆலயத்தில் சென்ற வெள்ளிக்கிழமை மாலை திரு தா. பொன்னம்பலம் அவர்களுக்குப் பாராட்டிப் பட்டமளிக்கையில் மூகாந்திரம் திரு. இ. பொ. இராசையா குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

இத்தகைய பெருமை வாய்ந்தவரின் பிரசங்கங்கள் உங்கள் எல்லோரையும் வெகுவாகக் கவர்ந்திருக்கும் என்பது எனது துணிவான நம்பிக்கை, இத்தனை நாட்களும் முத்தமிழின் நுண்ணிய பயிற்சியினுல் உங்களை இன்புறுத்தியும் அருளை அறிவுறுத்தியும் வந்துள்ள இவருக்கு முத்தமிழ் வித்தகர் என்று பட்டம் சூட்டி வாயார அழைக்க ஆசைப்படுகிறேன்.

### திருக்கேதீச்சரம் மகாசங்காபிஷேகம்

இவ்வருடம் திருக்கேதீச்சர ஆலய மகா சங்காபிஷேக விழா 10-7 63 புதன்கிழமை நடைபெறும்.

கேதீச்சரநாதருக்குப் கௌரி அம்பாளுக்கும அன்று பகல் மகா சங்காபிஷேகமும், விசேட பூசையும, அடியார்களுக்கு அன்னதானமும், மாலை தேவாரபாராயணமும், சைவப்பிரசங்கங்களும்,இரவு சுவாமி அம்பாள் மணவாளக் கோல உற்சவமும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

### மாவைக் கந்தன் திருவிழா

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் சென்ற 20-6-63 புதன்கிழமை கொடியேற்றத் திருவிழா நடைபெற்றது தொடர்ந்து திருவிழாக்கள் தினமும் நடைபெறறு வருகின்றன.

### சைவ அறிஞர்க்குப் பதவிகள்

வடபகுதி உதவி வித்தியாதிபதி மூலமாக வித்தியாதிபதிக்கு அகில இலங்கைப் பட்டதாரிகள் சங்கத்தினர் அனுப்பியுள்ள கடிதமொன்றில், விஞ்ஞானம் முதலிய பாடங்களுக்கு அந்தப்பாடங்களிற் புலமையுடையவர்களையே பள்ளிக்கூடப் பரிசோதகர்களாக வைத்துள்ளதுபோல, சைவசமயபாடப் பரிசோதகர்களாக சைவப் புலமைமிக்கவர்களையே நியமிக்கப்பட வேண்டும் என்றும், சைவப்பாடசாலைக்குச் சைவசமய அறிவும் உடையவர்களையே தலைமையாசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

### தேகவியோகம்

கொக்குவில் இந்துக்கல்லூரியில் முன்னுள் பிரதமாசிரியராகக் கடமையாற்றிய திரு. ச. சினிவாசகம் அவர்களின் பாரியார் ஸ்ரீமதி. சி. சிவபாக்கியம் அவர்கள் 23-6 63 அன்று மார்படைப்பினுல் காலஞ்சென்றனர், அவரது அந்தியக்கிரியைகள் மூளாயிலுள்ள அவர்கள் கிருகத்தில் சிறப்பாகச் சுற்றமித்திரர்கள் சூழ்ந்திருக்க 24-6-63 ல் அன்று நடைபெற்றன. அம்மையார் இந்துசாதனம் ஆங்கிலப் பிரசுரத்தின் பத்திராதிபராகக் கடமையாற்றிய திரு, ச. சிவகுருநாதர் அவர்களின் சிரேட்ட புத்திரியாவர். காலஞ்சென்ற திரு சி. இராசதுங்கம் அவர்களும், வடமாகாண உதவி வித்தியாதிபதி திரு. சி உ. சோமசேகரம் அவர்களும் அவருக்குச் சகோதரராவர். திரு சி சண்முகநாதன், திரு. சி. சுவாமிநாதன், திரு. சி. யோகநாதன் ஆகியவர்கள் அவருடைய புத்திரராவர், ஸ்ரீமதி, குமாரசுவாமி பத்மாவதி அவருடைய புத்திரியாவர். அம்மையார் கடவுள் பக்தி, ஈகை, இன்சொல், பொறை, பதிபக்தி, தயை ஆகிய பண்புகளுக்கு உறைவிடமானவர். அவருடைய பிரிவைக்குறித்து வருந்துகின்ற அவருடைய நாயகனுக்கும், பிள்ளைகளுக்கும் எங்கள் மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கின்றேம்.

### மதுரை மீனுட்சி அம்மன்

தென்னிந்தியச் சிற்பக்கலையின் சிறப்பைப் பறைசாற்றி வானளாவி நிற்கும் மதுரை மீனுட்சியம்மன் கோயில் 18 இலட்சம் ரூபா செலவில் புதுப்பிக்கப்பெற்று இன்று 28-6-63 வெள்ளிக்கிழமை மகாகும்பாபிடேகம் நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
இல. M B 4273.

கொக்குவில் சின்னத்தம்பி கார்த்திகேசு தனக்காகவும்
இரத்தினசிங்கம் பெண் காலஞ்சென்ற மகேஸ்வரியின் சொதத்துக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 957/T வழக்கில் தத்துவகாரனகவும்,
—வழக்காளி.

எதிராக
யாழ்ப்பாணம் கொக்குவில்
1. தாமோதரம்பிள்ளை கைம்பெண் மாணிக்கம்
2. வீரவாகு சுப்பிரமணியமும் பெண்
3. செல்லம்மாவும்.
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4273-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1963 ம் ஞு ஆடி மீ 20 ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 4610-ம் 25-9-61 தொடக்கம் 13-3-62 வரைக்கும் ரூபா 4000 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் மூழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 251-92½ம், (செலவழித்த தொகை ரூ. 181-40; வெலியாத்துச்செலவு ரு 44-47½, ஏற்படக்கூடியசெலவு ரூ 26-05) தீர்வைத் தொகையில் ரூபா 2000-ம் இன்னும் ரூபா 167-92ம். கோட்டுச் செலவில் ரூபா 150 ம். கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கிறை "மாத்தனை" நில. பர. இலா. 5ம், வீடும், கிணறும், பயிர்களும், எல்லை கிழக்கு நடராசா பெண் மனேன்மணியின் ஆதனம். வடக்கு கந்தர் பொன்னம்பலத் திருதனம். மேற்கு இராமலிங்கம் பெண் அன்னலெட்சுமியின் ஆதனம். தெற்கு கையொழுங்கை, இதடங்கலும், கிழக்கெல்லைக் காணியின் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றிற் பங்கும் குறித்த காணியின் தெற்கருகாக வுள்ள வழிவாய்க்கால் உரித்தும். தூர்வைப் பங்கும். பதிவிலக்கம் D 227/174.

அ வெற்றிவேலு
கொமிஷனர்.
19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம், 24-6-63.
M. 53 28-6-63.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மட்டுவில் தெற்கு
சின்னத்தம்பி கனகசபை
—வழக்காளி.

இல. 2343.

எதிராக
மட்டுவில் தெற்கு
மாரிமுத்து சின்னத்துரை
—எதிராளி,

சாவகச்சேரி டிஸ்திறிககோட்டில் 2343-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1963-ம் ஆண்டு ஜூலை (ஆடி) மாதம் 27-ம் திகதி (27-7-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 3540-ம், இதில் ரூபாய் 3000-க்கு 12 - 12 - 61 திகதி தொடக்கம் 31 - 7 - 62 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின்திகதி தொடக்கம் மூழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 278-95 சதம். இதில் தீர்வையில் ரூபா 800-ம் கோட்டுச் செலவில் ரூபா 150-ம் இறுபட்டது.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மட்டுவில் தெற்கிறை "உடையார் வளவு" நிலப்பரப்பு 10-ம் மேற்படி நுணுவிலிறை "கதிரன் தோட்டம்" நிலப்பரப்பு 12-ம் ஒழுங்கை சேர்ந்து நிலப்பரப்பு (22) இதில் வடமேற்கே நிலப்பரப்பு ஒன்றும் குளி 3-ம் நீககி மிகுதி நிலப்பரப்பு 20-ம் குளி 15-ம். இதில் தெற்கே நிலப்பரப்பு 4½ நீக்கி மிகுதி நிலப்பரப்பு 16-ம் குளி 6-ம். இந்த நிலப்பரப்பு 16 குளி 6-ம் பயிர்களும் கிணறும். எல்லை கிழக்கு சின்னையா பாலசுப்பிரமணியத்திற்கும் சகோதரருக்குமுரிய ஆதனம், வடககு கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு ரேட்டு தெற்கு மாரிமுத்து அழகரத்தினத்திற்கும் மறுபேருககுமுரிய ஆதனம் இதடங்கலும், முற்பதிவு F 325/131.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer,
& Licenced Auctioneer
தெல்லிப்பழை, 28-5-1963
M 55 28-6-63.

---

## பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில்
மீசாலை வடக்கு
நல்லதம்பி கதிரவேலு
—வழக்காளி,

இல. 2260/P.

எதிராக
கரம்பகம்
1. முருகேசு மாரிமுத்துவும் பெண்
2. மூத்துப்பிள்ளையும்
3, புலிங்கதேவன் முறிப்பு தம்பையா சின்னத்தம்பி
4. கண்டாவளை மடுக்கரை வல்லிபுரம் வீரகத்தியும்
5. பெண் மூத்துப்பிள்ளையும்
6. கண்டாவளை சின்னையா தம்பிமுத்துவும்
7. பெண் சேதுப்பிள்ளையும்
8. கச்சாய் கணபதியார் சிவகுருவும்
9. பெண் அன்னப்பிள்ளையும்
10. பளை ஆனைவிழுந்தான் சின்னையா கைம்பெண் சின்னுச்சி
11. கொடிகாமம் சங்கரப்பிள்ளை கதிரேசு
—எதிராளிகள்,
12. பன்றிசுட்டான் வேலு சின்னையா
13. கண்டாவளை வேலு சங்கரப்பிள்ளை
14. மீசாலை வடக்கு தில்லையம்பலம் நடராசாவும்
15, பெண் சின்னம்மாவும்
—கூட்டு எதிராளிகள்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப்பகுதி கரைச்சிப்பற்று புலிங்கதேவன்முறிப்பு இறை வேம்படி விருதி நெற்பரப்பு 400. அளவைப்படி நெற்பரப்பு 296 குளி 2.2, என்னும் ஆதனம் அல்லது ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கின்றதென்று த்தாலுமகதறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1963-ம் ஞு ஆடி மீ 11ந் உ 9 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருக்கிறுர்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி,
வி வயிரமுத்து,
சக்கிடுத்தார்.
1963-ம் ஞு ஆனி மீ 11 உ
G 58 28-6-63.

---

## சமய தீட்சை

அ. இ. பொ. சேவைச்சங்க ஆதரவில் 23-6-63 ஞாயிற்றுக்கிழமை கல்லூர் மூத்த விநாயகர் ஆலயத்தில் 21 பேருக்கு இலவச தீட்சை நிறைவேற்றப்பட்டது.

சிவஸ்ரீ. இ. ஞானசேகரக் குருக்கள இவ்விலவச தீட்சையை நிறைவேற்றி வைக்கும்பொழுது தீட்சை பெற்றோர் சிவசின்னங்களை அணிவதற்கு வெட்கமடைகின்றனரெனவும் அதை அணியக் கூடிய ஒவ்வொருவரும் நற்பயனடைய ஏதுவாகின்றதெனவும் கூறிச் சிவசின்னங்களின் மகிமையையும் சக்தியுள்ள விபூதியைத் தயார்செய்யும் விதத்தையும் எடுத்துரைத்தார்.

செயலாளன் திரு. த. இராசரத்தினம் சொற்பொழிவாற்றுகையில் எந்த மதத்தினரும் 7-ம் பராயத்திற் சமயப் பிரவேசஞ் செய்யவேண்டுமெனவும், சைவ சமயத்தைத்தவிர ஏனைய சமயங்களில் கட்டுப்பாடுடனேயே சமயப்பிரவேசத்தைக் கடைப்பிடிக்கின்றனரெனவும் கூறினுர்.

---

## ரோசாலையில் பெரு விழா

ரோசாலை சைவநீதிக் கழகத்தின் ஆதரவில் விவேகானந்தர் நூற்றாண்டுவிழா மொக்காதோட்டம் விக்ரன் பாடசாலையில் 23 - 6 - 63 ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. திருமதி. ஸ்ரீ. காந்தி கணநாதன், திரு. நா. அருமைநாயகம், என். நவரத்தினராசா ஆகியோர் கூட்டுப்பிரார்த்தனை பாடினர். ஆத்மஜோதி ஆசிரியர்திரு. நா முத்தையா திரு க. சபா ஆனந்தர், எஸ். வி. ஆறுமுகம், பண்டிதை செல்வி இராஜலட்சுமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

---

## கேட்டீரோ கதையை



பெரியவர்: விகடரே! கேட்டீரோ கதையை: தபால் வங்கியிற் சேமிப்புக்கு வைத்த பணத்தைத் திருப்பித் தரமாட்டார்களாம் அரசாங்கத்தார்.

விகடன்: அதா? அதற்கு வேறு தேவை யிருக்குப் பெரியவரே கோமாளிப் பேச்சிற்சொன்னுல் இறிம்மிலே ஓடுகின்றுர்கள். அதல்ல: சிங்கள மொழியிற் கருமஞ் செய்தால் மக்கள் வங்கிரேட்டுத்தான். வேலை செய்கிறதென்ற பழக்கமே அந்தமொழிக்கு இல்லையே!

---

## தீய செயலையே வெறுப்போம்

வளர்ந்தவர் வளர்த்த தாயின் பாலைக் குடித்துச் சீவிக்கலாமா? குழந்தை தாய்ப்பாலையே கட்டாயம் குடித்து வாழவேண்டும். ஆகவே குழந்தைக்குச் சரியெனக் கொள்ளக்கூடியதொரு நீதி வளர்ந்தார்க்குப் பொருந்தாதேயாம். வளர்ந்தோர் செய்வது தவறு என உலகம் கருதும் ஒரு செயலைச் சிறு குழந்தைகள் செய்வது சரியென ஒப்புகின்றது குழந்தையின் செயல் எமக்குப் பிழையாயினும் யாம் அக் குழந்தையை வெறுப்பதில்லை. யாம் அச்செயலைச் செய்யின், செயலை வெறுப்போமன்றி எம்மை வெறுப்பதில்லை அதனைப் போல எங்கள் நண்பர்கள் செய்யும் தவறுகளை வெறுப்பதன்றி அவர்களை யாம் என்றும் வெறுக்கக் கூடாது. அத்தவறுகளை யாம் செய்யக்கூடாது. உலகம் முழுவதும் கடவுள் மயமே; அவனன்றி ஓரணுவும் அசையாதன்றோ?

— சுவாமி ராமதீர்த்தர்,

---

## பன்னிரு திருநாட்கள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், ஆதீனத்தின் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் தேவஸ்தான மகோற்சவம் ஆதீன முதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூசைவிழா இவைகளையொட்டி வைகாசி 19 ம் உ முதல் 30 ம் தேதிவரை "திருநெறிய தெய்வத் தமிழ்" மகாநாட்டைத் துவக்கி வேதஉபநிஷதத் திருநாள், சிவாகமத் திருநாள், இதிகாசத்திருநாள் புராணத்திருநாள் சங்க இலக்கியத்திருநாள், சமயவரலாற்றுத் திருநாள், பெருங்காப்பியத் திருநாள், பிரபந்தத்திருநாள், திருமுறைத் திருநாள், சித்தாந்த சாத்திரத்திருநாள், பண்டார சாத்திரத் திருநாள் விழாக்களாக மகாநாட்டைச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். வைகாசி 30 ம் தேதி காலை குருபூஜை விழாவன்று ஆதீன பூஜாமூர்த்தியான ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கும் பெருந்திட்டத்தில் அபிஷேகங்கள் செய்துள்ளார்கள். அபிஷேகத்தில் 1000 சேர் பால் அபிஷேகம் செய்தார்கள். குருபூசைவிழாவில் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் 6 ம் திருமுறை வெளியீடு செய்துள்ளார்கள்.

வைகாசி 31 ம் தேதிஇரவு ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள் தங்கசிவிகையில் எழுந்தருளி பட்டணப் பிரவேசம் வந்தார்கள்.

திரு. மா, பா. "தினமணி"நிருபர்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3734
கணபதிப்பிள்ளை இராமலிங்கம்
அராலி தெற்கு —வழக்காளி

எதிராக
கணபதிப்பிள்ளை கந்தையா கைம்பெண் கனகாம்பிகை தனககாகவும் காலஞ்சென்ற க. கந்தையாவின் ஆதனங்களுக்குச் சட்டப்படி நியமிககப்பட்ட பிரதிநிதியாகவும் — அராலி கிழக்கு
எதிரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B. 3734-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல விபரிக்கப்படும் காணி 1963-ம் ஆண்டு ஆடி மாதம் 27-ந் திகதி காலை 10½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை :— ரூபா 1633-33 ம் 9-11-60 தொடக்கம் 22-10-62 வரையில் ரூபா 1000 க்கு 8 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும் வரையில் மூழுத தீர்வைத தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 321-26-ம்.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுககோட்டைக் கோவிற்பற்று அராலி கிழக்கிறை "வீமலிட்டி" உறுதியின்படி பர. நில. இலாச்சம் 9 5/8 அளவின்படி 10¾ம் பனைகளும் செய்பயிர் வான்பயிர்களும் இந்தப் 10 3/4 பரப்பிற்கு எல்லை கிழக்கு வேலன் பெண் கட்டைச்சியினதும் ஆறுமுகம் தம்பிமுத்துவினதும் ஆதனம்; வடக்கு வேலுப்பிள்ளை சிவப்பிரகாசத்தின் ஆதனம், மேற்கு ஒழுங்கையும் வேலுப்பிள்ளை சிவப்பிரகாசத்தின் ஆதனமும், தெற்கு வேலுப்பிள்ளை சிவப்பிரகாசத்தினுதனமும் ஒழுங்கையும்.

க. செல்வத்துரை,
கொமிஷனரும்நிலமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 12-6-63.
M 51 21-6-63

---

## சைவ சமய ஞானவிருத்திநிலையம்

மேற்படி நிலையத்தின் 6-வது வருடாந்தக்கூட்டம சென்ற 21 - 6 - 63-ம் திகதி மாலை 9 மணிக்கு செ. கந்தசாமி அவர்களின் தலைமையில் திரு. செல்லப்பா சுவாமிகள் ஆச்சிரமத்தில் திரு. சோ. சின்னராசாவின் தேவார ஆராதனையுடன் ஆரம்பமாயிற்று.

தலைவர் தமது தலைமையுரையில் கடந்த 5 ஆண்டுகளாக இச்சபை ஆற்றிய தொண்டுகளை மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார். அவர் மேலும் கூறியதாவது இச்சபையின் தொண்டுகளையும் சமயப்பிரசாரங்களையும் எவ்விதம் விஸ்தரித்து நடத்த வேண்டும் என்பதை விளக்கினுர். அதன்பின் அ. இ. பொதுஜன சேவைச்சங்கக் காரியதரிசி திரு த. இராசரத்தினமும் பேசினுர்,

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
இல. M,B, 3935,
யாழ்ப்பாணம் வண் கிழக்கு
சுப்பையா பொன்னம்பலம்
கந்தையா —வழக்காளி.

எதிராக
யாழ்ப்பாணம்
211/1 கஸ்தூரியார் ரோட்
1, சுந்தரம் இராசரெத்தினமும் மனைவி
2. இராசேஸ்வரியும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 3935-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1963 ஞு யூலாய் மீ 27 உ (27 - 7 - 63) சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக்காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்


தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1613/- மேலும் 1000/- ரூபாவுக்கும் 2 - 3 - 61 திகதி தொடக்கம் 30 - 11 - 61 திகதி வரைக்கும் வருடமொன்றுககு 12% வீத வட்டியும் அதன்பின் மூழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுககு 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 183-20 சதமும்.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணுர்பண்ணைக் கோவிற்பற்று வண்ணுர்பண்ணை வடகிழககிறை 'மூப்பிவளவு" நிலப்பரப்பு 1 குளிகள் 14¾. இதில் மேற்குப் பக்கமாக நிந்தமாக்கப்பட்ட நிலப்பரப்பு (V.C) குளிகள் 16 3/8 கல்வீட்டில் அரைவாசிப்பங்கும் கிழக்குக்காணியிலிருக்கும் கிணற்றுப்பங்கும் வழிவாய்க்காலுரித்தும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும்சொல்லப்பட்ட அரைவாசிப்பங்கு குளிகள் 16 3/8-க்கும் எல்லைகிழக்கு சங்கரப்பிள்ளை கந்தசாமி மனைவி தையல்நாயகியினுதனம். வடக்கு கைஒழுங்கை மேற்கு ஏகலையன் கதிரமரினுதனம், தெற்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினுதனம். பதிவு இல, D 242/8.

வி, சே. குட்டிப்பிள்ளை,
கொம்மிஷனர்.
643 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம் 8-6-63.
M 57 28-6-63,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அருளுக்காக அழுதார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சையும் கரைத்து உருக்கிவிட வல்ல ஒரு தெய்வீகப்பனுவல். இதனுல்தான் "திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்னும் அனுபவக்குரல் எழுந்தது. இரும்பு இதயங்களைக் கசிய வைக்கும் பாங்கு ஒரு பனுவலுக்கு உண்டென்ருல் அப்பனுவலை ஆக்கியளித்தவருக்கும நெஞ்சு கசிந்துருகியிருக்க வேண்டும். உருகிய உணர்வுக்கு உருவம் கொடுத்தால் அது உள்ளொளி பரப்பி உலப்பிலா ஆனந்தத்தைத் தரும். மணிவாசகரின் உள்ளம் உருகி வழிந்து உணர்ச்சி மேலீட்டால் கொந்தளித்துக் கருணைக்கடலான கடவுளைக் காண விழைந்த வேட்கையே திருவாசகமாக வடிவெடுத்திருக்கிறது. சிவானுபவத்தில் அமிழ்ந்து ஊறித்திளைத்து - தாம்பெற்ற இன்பத்தை, வேறு யாரும் காட்டாத, காட்ட முடியாத வகையில் எமககு அள்ளித்தருபவர் மாணிக்கவாசகரே!

திருவாசகப்பனுவலை உள்ளம் ஒன்றி ஓதுங்கால் மணிவாசகர் பெற்ற அருட்செல்வத்தைப் பெறமுடியாத தன்மை உடையோமாயினும, திருவருட்தென்றலை நுகர முடிகிறது தூய நெஞ்சத்தின் துடிப்பு அழுகையாய் மாறி அரற்றியமையையும் திருவாசகத்தில் காணலாம். திருவாசகம் தந்த திருவாதவூரர் இறைவனை நோக்கி அழுதிருக்கிருர். அவர் அழுது பெற ஆசைப்பட்டது ஆண்டவனின் அருளை. அவர் காண விழைந்தது ஆண்டவனின் அடியை.

இறைப் பற்றுக்கொண்டோரின இதயம் ஏதாவதொரு நல்ல இலட்சியத்தோடுதான் இலங்கும். அத்தகையவர்கள், தம்மை இழிவுபடுத்தி இலட்சியத்துக்கு மேலும் மேலும் மெருகூட்டமுனைவர். நாடு உய்ய வந்த நாவுக்கரசர் உழவாரத் தொண்டால் உலகறிந்த உத்தம இலட்சிய வீரராய் திகழ்ந்தும் "குறிக்கோள் இல்லாது கெட்டேன்' எனத் தம்மைத் தாமே சாடுகின்ருர். இதைப் போலவே மாணிக்க வாசகரும் கங்கை தாங்கிய மங்கை பங்கனை நினைந்து நினைந்து நெக்குருகி நேர் வழியில் சென்ற தம் நெஞ்சைப் பார்த்து "வாழ்கின்ருய் வாழாத நெஞ்சமே!" என்கிருர். இத்தகு அனுபூதிமான்களின் இவ்விதச் செயல்கள் அவர்கள் கண்ட சமுதாயச் சூழலைக் காட்டுகின்றன. சமுதாய நலனுக்காகவும் - சமய வளர்ச்சிக்காகவும் நாளும் பொழுதும் உழைத்து, இன்னிசையால் இறையுணர்வை யூட்டியவர்கள் சமூகச் சீர்கேட்டைக்கண்டிக்களண்ணி, அக்கேட்டினைக் களைய முனைந்திருக்கிருர்கள்.

மணிவாசகர் நாயடியேன் - பொய்யனேன் அழுக்குமனத்து அடியேன் - வெறுப்பனவே செய்யும் சிறியேன் - நாயேன் - என்றெல்லாம் தம்மை விளித்துத் - தரணிக்கு நன் 'மார்க்கம் காட்டுகின்ருர்

மணிவாசகர் காலத்தில் இறைவனைப்பற்றிச் சிந்திக்காது நாத்திகவாதம் புரிந்தோரும், கடவுளை மதிக்காத கருத்துக் குருடர்களும் இருந்திருக்கிருர்கள். அத்தகையவர்கள் தம் வேலையை வேகமாகவும் செய்திருக்கிருர்கள். அவர்களது வேகம் கடவுள் கொள்கையைத் தகர்க்காவிட்டாலும்; ஒரு அசைவினை உண்டாக்கி விட்டது. இதனைக்கண்ட மணிவாசகர் "நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர்" எனக் கூறி அவர்களது செயல்கள் தழும்போடு நிற்பதே தவிர தத்துவ மாற்றத்துக்கு எதுவும் செய்யாது என்பதைக்காட்டியிருக்கிருர்

—தொடரும்,

## அணிந்துரை அரங்கம்

**நூல்நிலையம்**

மேலைப் புலோலி நூல் நிலையத்தினரால் நூல்நிலையம் என்ற பெயரில் தட்டச்சில் வெளியிட்டுள்ள பத்திரிகை கிடைத்தது. சிறு கதைகள், செய்திகள், இலக்கிய, கல்வி கட்டுரைகள் நிறைய இடம்பெற்றிருக்கும் இச்சஞ்சிகை சிறந்த முயற்சியாகும்.

**சுகாதார ஒலி**

மாநகரசபையின் சுகாதாரப்பகுதிக்காக அண்மையில் நடைபெற்ற சுகாதார விழாவையொட்டி வெளியிடப்பட்ட சுகாதார ஒலியில் சுகாதாரக் கருத்துக்களைப் போதிக்கும் கவிதைகளும் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
நீர்வேலி வடக்கு
காசிப்பிள்ளை செல்லையா
— வழக்காளி.

இல. M. B. 4962.

எதிராக:

1. திருநெல்வேலி நடராசா ஐயர் கந்தசாமிஐயர் (2) சுந்தரேஸ்வரன் (3) விஜயலெட்சுமி (4) சரோஜினிதேவி (5) லலிதாம்பாள் (6) மகேஸ்வரி (7) சர்வேஸ்வரன் (8) செகதீஸ்வரன் (9) செகதாம்பாள் (10) கணேசன் யாபேரும் நடராசஐயர் கந்தசாமி ஐயரின் பிள்ளைகள் அவர்களின் பிரதிநிதி முதலாம் எதிராளி.

11. இருபாலை வெற்றிவேலு பொன்னையா — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4962ம் இலக்க வழக்கில் எனககுக்கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963 ம் ஞு ஆடி மீ 20 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக்காணக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 8890-ம் ரூபா 10,000 க்கு 22-7-62 தொடககம் 24-1-63 வரை 12 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 361-25 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கராச்சிப்பகுதி முரசுமோட்டை இறை "முரசுமோட்டைக்காடு" ஐந்து ஏக்கர் ஏழு பேர்ச் (5 ஏக்கர் 7 பேர்ச்) எல்லை கிழக்கு ஆறு. வடக்கு சிதம்பரப்பிள்ளை சுவாமிநாதனுக்குரிய வாதனம், மேற்கு வல்லிபுரம் நடராசாவிற்குரிய வாதனம். தெற்கு 79 A. T. என இலக்கமிடப்பட்ட துண்டுக்காணி. இதடங்கலும் இதன் பதிவு B 44/4.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
1963-ம்ஞு ஆனி மீ 8-ம்உ
காரைநகர்.
M. 56 28-6-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

நெடுந்தீவு
சுப்பிரமணியர் நாகேந்திரர்
—வழக்காளி.

வழக்கு இ. M. B. 692.

எதிராக:

நெடுந்தீவு மேற்கு
அம்பலவாணர் சுப்பிரமணியம்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 692-ம் இலக்க வழக்கில் எனக்குக கிடைதத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963-ம் வருடம் ஆடி மாதம் 23-ந் தேதி (23-7-63) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தககாணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 543-ம் 1-12-55 தொடக்கம் 26-11-1956 வரைக்கும் ரூபா 543-க்கு 9 வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத்தொகைக்கும் பணம் முற்ருக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 147-65 சதமும்.

காணி விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், தீவுப்பகுதி, நெடுந்தீவு கோயிற்பற்று, நெடுந்தீவு மேற்கு இறை, "கந்தன்காடு" (Kanthankadu) நிலப்பரப்பு கிட்டத்தட்ட 68- முதுபனைகளும் இளம் பனைகளும், செய்பயிர்களும். எல்லை கிழக்கும் மேற்கும் முடிக்குரிய காணி வடக்கு முடிக்குரிய காணியும் S. சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு கட்டையர் வேலாயுதருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும் வல்லாறியன் லோறன்சுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்களும், அம்பலவாணர் ராமச்சந்திரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும். இதடங்கலும்.

செ. பாண்டித்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer
மல்லாகம் 22-6-63.
M. 52 28-6-63.


இவ்வாரம் 30-6-63 — 6-7-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தம்பி தங்கையர் மிகஉதவுவர். முதலிருநாட்களும் புதியமுயற்சிகளுக்குச் சாதகமானவை. புதன் வியாழன் வெள்ளி காலை எச்சரிக்கையோடு கழியவேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

பணமளவில் நல்ல வாரம். பழைய முதலீடுகள் நற்பயன் தரும். கல்விஈடுபாட்டில் வெற்றியும் உண்டாம். வெள்ளி மாலை சனி எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், ம் பாதம்.

உடல் நிலைக் குழப்பங்களுக்கு இடமுண்டு. பணமளவில் ஓரளவு நல்லவாரம், புதிய முயற்சிகள் தடங்கல்படும். ஆனுல் வெற்றி பெறும். நண்பர்கள் இக்கட்டிலிருந்து காப்பர்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

பணமளவில் நல்ல வாரம். புதிய முயற்சிகள் நற்பயனைத் தரும். மன நிம்மதி இருக்காது. உடல் நிலைக்குழப்பங்களுக்கும், கண்நோய்க்கும் இடமுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

மனநிம்மதி இருக்காது. அலுவலகத்திலும் வீட்டிலும் குழப்பங்களுக்கும் இடமுண்டு. ஆனுல் எதிரிகளை வெலல முடியும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தொழிற்பொறுப்புகளுக்குகந்த வாரம். புகழும் பண இலாபமும் உண்டாம, குடும்பவட்டத்தில் தவருன விளக்கங்களுக்கு இடமுண்டு, சிறு உடல் நிலைக்குழப்பங்களும் உண்டாம்,

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இனத்தவருடன் மோதலுண்டாம். மனநிம்மதி இருக்காது, வழக்குகளும் அனவசிய செலவுகளும் உண்டாம். தந்தையாரின் உடல்நிலை ஊறுபடும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். அயலவரும் அந்நியரும் உதவுவர், ஆனுல் உடல்நிலை ஊறுபடும் அலுவலகத்தில் சில குழப்பங்களுககு இடமுண்டு.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

மன நிம்மதி இருக்காது. உடல்நிலை குழப்பமும் குடும்பக்கவலையும் உண்டாம். வேலை வழமையிலும் அதிகமாக இருக்கும். தந்தையாரின் உடல் நிலை பாதிக்கப்படும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

குழப்பமான வாரம். பெரும் கண்டனங்களுக்கு நீர் முகங் கொடுக்கவேண்டி வரும். அலுவலகத்திலும் உடல் நிலையிலும் குழப்பமுண்டாம், சிறு விபத்துக்களுக்கும் தடையில்லை ஆனுல் எதிரிகளுக்கு இடையூறும் உண்டாம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

பண இலாபமும் புகழும் நிச்சயம். நண்பர்கள் மிக உதவுவர். குடும்பக் கோளாறுகள் உண்டாம். உடல்நிலையும்ஊறுபடும். ஞாயிறு காலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

நண்பர்கள் மிகஉதவுவர். எதிரிகளுக்கு இன்னலும் உமக்குப் புகழும் நிச்சயம். நிலபுலங்களால் இலாபமும் உண்டாம். ஞாயிறு மாலை, திங்கள் செவ்வாய் எச்சரிக்கையோடு கழியவேண்டும்.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

**100 ரூபா விகிதமான 5000 பங்குகள்**

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14



யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 28-6-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org